பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 22 புதன்கிழமை 05.05.2021 கதிர் 49

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# மகாவலி அதிகார சபையின் நில ஆக்கிரமிப்பு நிறுத்தம்!

## தமிழ் எம்.பிக்களிடம் சமல் உறுதி

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபையால் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்ட நில சுவீகரிப்பு நிறுத்தப் படும் என்று துறைசார் இரா ஜாங்க அமைச்சர் சமல் ராஜ பக்ஷ, தமிழ்த் தேசியக் கட்சி களின் நாடாளுமன்ற உறுப்பி னர்களிடம் இன்று உறுதிய ளித்தார்.

2





## நாடாளுமன்றத்துக்கு கோட்டா திடீர் விஜயம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று காலை நாடாளுமன்றத்துக்கு திடீர் விஜயம் செய்தார்.

ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், டி.வி.சானக ஆகியோர் நாடாளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலில் ஜனாதிபதியை வரவேற்றனர்.

2



## ரிஷாத் எம்.பியின் பாதுகாவல் அதிகாரிகள் சிலருக்குக் ‘கொரோனா’

### சபாநாயகருக்கு சி.ஐ.டி. அறிவிப்பு

குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஒரு சிலருக்கும், ரிஷாத் பதியுதீன் எம்.பி.யின் பாதுகாவல் அதி காரிகள் ஒரு சிலருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள காரணத்தால் நாடாளு மன்ற உறுப்பினர்

2

## கல்முனை விவகாரம்: வருகின்றது முடிவுக்கு

### சமலுடன் தமிழ் எம்.பிக்கள் நடத்திய சந்திப்பில் இணக்கம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

கல்முனை பிரதேச செயலகத்துக் கணக் காளரை நியமிக்கவும் எல்லைகளை உறு திப்படுத்தவும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ வுடன் தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்று நடத் திய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மல நாதனின் ஏற்பாட்டில் கடந்த மாதம் நடை பெற்ற

2

## முகக் கவசம் அணியாதோரை மடக்கி அள்ளும் அதிரடி யாழில்





(ந.லோகதயாளன்)

யாழ் நகரில் முகக்கவசம் அணியா மல் அல்லது பகுதிகளில் முகக் கவசம் அணிந்து நடமாடுவோரை மடக்கி அள் ளும் நடவடிக்கை சகல கவச உடை அணிந்து, வீடியோக்கமராக்கள் சகிதம் அதிரடியாகப் புகுந்த பொலிஸ் அணியி னரால் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இதனால் யாழ் நகரத்தில் இன்று பிற்பகல் பெரும்

4

## பத்து லட்சம் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கும் பைஸர்

இலங்கைக்கு அடுத்துவரும் மூன்று மாதங்களில் ஒரு லட்சம் தடுப்பூசிகளையும், அதனைத் தொடர்ந்து 10 லட்சம் தடுப்பூசி களையும் வழங்குவதற்கு பைஸர் நிறுவனம் உறுதி அளித்துள்ளது.

இந்தத் தகவலை அரச மருந் தகக் கூட்டுத்தாபனத்தின் தலை வர் வைத்திய நிபுணர்

2

## வவுனியா உட்பட 4 மாவட்டங்களில் மேலும் சில பிரதேசங்கள் முடக்கம்

### இராணுவத் தளபதி அறிவிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக மேலும் சில பிரதேசங்கள் இன்று காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பமு னுவ கிராம சேவகர் பிரிவு, பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொன்னத் தர (585, 585ஏ) கிராம சேவகர் பிரிவு கள், தெல்தர (569, 569ஏ) கிராம சேவ கர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள் ளன.

2



## வீடுகளில் திடீரென உயிரிழந்த மூவருக்குக் கொரோனா உறுதி

மாலபே பிரதேசத்தில் இரு வீடுகளில் மூவர் திடீரென உயிரிழந்துள்ளனர். இதையடுத்து அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளுக்கு அமைய, அவர் கள் மூவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒரே வீட்டில் வசித்து வந்த கணவன், மனைவியும் மற்றும் அயல் வீட்டுப் பெண்ணொருவரும் அடங்குகின்ற னர் என்று அப்பிரதேசத்துக்கு பொறுப்பான பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித் துள்ளார்.

2

### கொரோனாத் தொற்றில் இருந்து

## இந்தியா மீண்டெழ யாழில் விசேட பூஜை



(எஸ்.நிதர்ஷன்)

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையில் இருந்து இந்தியா மீண் டெழவும், புத்தெழுச்சி பெற வும் வேண்டும் என்று யாழ்ப்பாணம்

2

## ஏப்ரல் விபத்துகளில் 205 பேர் உயிரிழப்பு!

இலங்கையில் ஏப்ரல் மாதத் தில் மாத்திரம் நாடு முழுவதும் பதிவான 1,959 வீதி விபத்துக்க ளில் 205 பேர் உயிரிழந்துள்ள னர் எனவும், 1,254 பேர் காயம டைந்துள்ளனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரி வித்தார்.

புள்ளிவிவரங்களின்படி, ஆண்டின் பிற மாதங்களுடன் ஒப்பிடும்போது

2

## ஊடுருவுபவர்கள் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும்

### யாழ். மக்களுக்கு எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக ஊடுருவுபவர்கள் தொடர்பில் பொதுமக்கள் விழிப் பாக இருக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன்

2



## கல்முனை விவ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின் அடிப்படையில் இன்றைய விசேட சந்திப்பு இடம்பெற்றது. இதன் போதே மேற்படி விவகாரம் தடர்பில் இணக்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்திப்பில் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு அமைச்சால் நியமிக்கப்பட்ட கணக்காளர் கடமையைப் பொறுப்பேற்காததமையால் உடனடியாகப் புதிய கணக்காளர் நியமிக்கப்படுவார். அதேநேரம் தனிப் பிரதேச சபை விடயத்தில் சில இடங்களில் எல்லைகள் தொடர்பான முரண்பாடு காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே, இதனை முதலில் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இதனைத் தீர்ப்பதற்காக எல்லை வரையறையை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் கையளித்து அதன் பிரதியை அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் கையளிக்க வேண்டும் எனவும், அதன் அடிப்படையில் விரைந்து தீர்வு எட்டப்படும் எனவும் இணக்கம் காணப்பட்டது.

அமைச்சருடனான இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## வவுனியா உட்பட 4...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குட்டிவில கிராம சேவகர் பிரிவும், வவுனியா மாவட்டத்தின் பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள் புதுக்குளம் (208ஏ) கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிப்பிட்டி பொலிஸ் பிரிவின் பல்லேகம (214ஏ), உடகம (214), புதிய நகரம் (214ஜி) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், பனாமுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலல்கொட (213), சூதுகல (212ஏ) மற்றும் பனாமுர (213பி) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் மற்றும் வேவல்வத்தை பொலிஸ் பிரிவில் ரத்கம (162எப்) கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மகாவலி அதிகார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில் கடந்த மாதம் இடம்பெற்ற சந்திப்பின் அடிப்படையில் இன்று கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பான விசேட சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயமும் பேசப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர்கள், செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு நேரில் சென்று பார்வையிட்டு கருத்தறிந்து இறுதி முடிவு எட்டப்படும் என்று தங்களால் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட நிலையில் தற்போது அந்த உத்தரவாதம் மீறப்பட்டு மகாவலி அதிகார சபை செயற்பட முனைகின்றது என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதைச் செவிமடுத்த துறைசார் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, குறித்த பகுதிக்கு எம்மால் நேரில் பயணித்து அது தொடர்பான இறுதி முடிவு எட்டப்படும் வரையில் மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை நிறுத்துமாறு செயலாளர் ஊடாகக் கடிதம் அனுப்பப்படும் என்று உத்தரவாதம் வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## ஊடுருவுபவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டார்.

தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை அதிகரித்துள்ள நிலையில், அங்கிருந்து மக்கள் கடல் கடந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் பிரவேசிப்பதற்குரிய வாய்ப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

நேற்று சட்டவிரோதமாக நுழைய முற்பட்டவர்கள் 11 படகுகளுடன் சிக்கினார்கள். இது குறித்து ஆழ்கடல் மீனவர்களும், மீன்பிடி சமூகத்தினரும், கரையோரப் பகுதியில் உள்ள பொதுமக்களும் அவதானமாக இருக்க வேண்டும்.

கடலில் ரோந்து நடவடிக்கைகளைக் கடற்படையினர் அதிகரித்துள்ளதோடு, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து, யாழ். மாவட்டத்தை கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மாதத்துக்குப் பின்னர் 1,643 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், தற்போது 968 குடும்பங்களைச் சேர்ந்த 1,995 நபர்கள் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்- என்றார்.

## ஏப்ரல் விபத்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏப்ரல் மாதத்தில் அதிக விபத்துக்கள் பதிவாகியுள்ளன எனவும், குறிப்பாக சிங்கள - தமிழ்ப் புத்தாண்டு பருவகாலத்தில் இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளன என்றும் அவர் கூறினார்.

மேலும், மேல் மாகாணத்திலேயே அதிகமான விபத்துகள் 768 பதிவாகியுள்ளன. அதேபோல், வடமேற்கு மாகாணத்தில் 237 விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களே கடுமையான வீதி விபத்துக்களில் சிக்கியுள்ள எனவும், திங்கட்கிழமைகளில் அதிக விபத்துக் கள் இடம்பெறுகின்றன எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியா மீண் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ நாக விகாரையில் இன்று விசேட பூஜை வழிபாடு நடத்தப்பட்டது.

இலங்கை அரசினதும் நாட்டு மக்களினதும் சார்பாக, சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் பூஜை நடைபெற்றது.

இதன்போது ஸ்ரீ நாக விகாரையின் விகாராதிபதி தலைமையில் ரத்ன சூத்திர பாராயணமும், இந்து மதக் குருக்கள் தலைமையில் விசேட பூஜையும் இடம் பெற்றது.

இலங்கையில் தற்போது உள்ள சட்டதிட்டத்துக்கு அமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி குறைந்த நபர்களின் பங்குபற்றலுடன் பூஜை வழிபாடு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் இந்து, பௌத்த மதகுருமார்கள் கலந்து கொண்டனர்.

## வீடுகளில் திடீரென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்கள் 84 - 91 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த தம்பதியினரின் மகனும் அவரது மனைவியும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த மற்றைய பெண்ணின் மகளும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

## பத்து லட்சம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரஷ்யாவின் 'ஸ்புட்னிக்- வி' கொரோனாத் தடுப்பூசி இலங்கைக்குக் கிடைக்கின்றது. மக்களுக்கு முறையான விதத்தில் தடுப்பூசி ஏற்றப்படுகின்றதா? என்பதை ஆராய்ந்த பின்னர் இந்தத் தடுப்பூசி தொகையை வழங்க ரஷ்யா இணக்கம் தெரிவித்தது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இந்தியாவின் 'சீரம்' நிறுவனத்திடமிருந்து கொரோனாத் தடுப்பூசிகள் கிடைத்திருந்தன.

இதனைத் தொடர்ந்து சீனாவிடமிருந்து 6 லட்சம் 'சினோபார்ம்' தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைத்தன - என்றார்.

இதேவேளை, அரச மருந்தகக் கூட்டுத் தாபனம் அமெரிக்காவின் 'பைசர்' நிறுவனத்துடனும், ரஷ்யாவின் 'ஸ்புட்னிக்' நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

அத்துடன், ஸ்புட்னிக் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய இலங்கை 13 கோடி தடுப்பூசிகளையும், பைஸர் நிறுவனம் மூலம் 10 லட்சம் தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளவுள்ளது.

இதனிடையே, உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாக விநியோகிக்கப்படும் அஸ்ட்ராஜெனெக்கா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சு தற்போது இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாதுகாவல் அதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிஷாத் பதியுதீனை நாடாளுமன்ற அமர்வுகளுக்கு அனுமதிக்க முடியாதுள்ளது எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சபாநாயகருக்கு அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டுவரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்தால் அவரை நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் ஆலோசனைக்கு அமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

எனினும், ரிஷாத் பதியுதீன் சபைக்கு அழைத்து வரப்படவில்லை .இது தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதமகொறடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்று கேள்வி எழுப்பியிருந்தார். அது தொடர்பில் ஆராய்வதாக சபாநாயகர் கூறினார்.

இந்நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஒரு சிலருக்கும், ரிஷாத் பதியுதீன் எம்.பியின் பாதுகாவல் அதிகாரிகள் ஒரு சிலருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள காரணத்தால் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை நாடாளுமன்ற அமர்வுகளுக்கு அனுமதிக்க முடியாதுள்ளது எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சபாநாயகருக்கு அறிவித்துள்ளனர் என சபாநாயகர் தரப்பு கூறியுள்ளது.

## நாடாளுமன்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட அமைச்சர்களுடன் நாடாளுமன்ற சபை மண்டபத்துக்கு வந்த ஜனாதிபதி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருடன் சபையில் அமர்ந்தார்.

ஜனாதிபதி சபையில் அமர்ந்திருந்த போது வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன உரையாற்றினார்.

சிறிது நேரத்தில் சபையிலிருந்து வெளியேறிய ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் உள்ள தனது அலுவலகத்துக்குச் சென்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அபரிமித வாழ்த்து எதற்கு?

**தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவடைந்து விட்டது. மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடமேறுகின்றது. ஒரே யொரு வித்தியாசம். பழைய சாணக்கியரான கலைஞர் மு.கருணாநிதி இப்போது இல்லை. அவரது மகன் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராகின்றார். கருணாநிதி உருவாக்கிய வாரிசு உரிமையை – குடும்ப ஆட்சி முறைமையை – உறுதிப்படுத்துவதற்கு மகன் ஸ்டாலினுடன் பேரன் உதயநிதி ஸ்டாலினும் ஆட்சிக் கட்டில் சேர்ந்து அமர்கின்றார். அவருக்கும் அமைச்சுப் பதவி ஏதும் கிட்டுமா என்பது இரண்டொரு தினங்களில் தெரிந்து விடும்.**

**சரி. தமிழகத்தில் வாரிசு ஆட்சியுரிமையை உறுதிப்படுத்தியா யிற்று, இதனால் ஈழத் தமிழர்களுக்கு நலன் ஏதும் உண்டா? குறைந்தபட்சம் இலங்கையில் நாளாந்தம் பறி போய்க் கொண்டிருக்கும் தமிழர்களின் பிறப்புரிமையைக் காபந்து பண்ணுவதற்காகவேனும் இந்த வாரிசு ஆட்சியுரிமை வழிசெய் யுமா என்று கேட்டால் கேள்விக்குறிதான்.**

**ஆனால், புதிதாகப் பதவியேற்கும் தமிழக முதல்வர் ஸ்டாலி னுக்கு இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் தெரிவிக்கும் – வழ மைக்கு மாறாக பெரும் எண்ணிக்கையில் போட்டி போட்டுத் தெரிவிக்கும் – வாழ்த்துக்களை பார்க்கும் போது, ஏதோ ஸ்டாலி னின் தெரிவு மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு 'ஜென்மசாபல் யம்' கிடைத்து விடும் என நம்பிக்கை கொள்ளலாம் என்பது போன்றே தோன்றுகின்றது.**

**ஆளாளுக்கு ஒவ்வொரு கட்சியிலிருந்தும் – ஒரு கட்சியிலி ருந்து ஒன்றுக்கு மேற்பட்ட பலரும் – விழுந்தடித்துப் பாராட்டு மழையும் வாழ்த்தும் தெரிவிக்கின்றமையைப் பார்க்கும் போது ஒரு கேள்வி – சந்தேகம் – பிறக்கின்றது.**

**பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தி.மு.க. தமிழகத்தில் ஆட்சிப் பீடம் ஏறுவதால் அப்படி என்ன மாற்றம் வரப்போகின்றது – இலங்கைத் தமிழர்களுக்கு நன்மை கிட்டுவதற்கு?**

**மற்றக் கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவிக்கும்போது நாங்கள் தெரிவிக்காமல் விடுவதா என்று போட்டிக்கு சில அர சியல் தலைவர்கள் வாழ்த்துகின்றனர்.**

**தங்கள் படத்துடன் செய்தி வருவதற்கு – தாங்களும் அரசியல் களத்தில் இருக்கின்றார்கள் என்பதை மக்களுக்குக் காட்டுவ தற்கு – உள்நாட்டில் தங்கள் இருப்பை வெளிப்படுத்துவதற்கு – இதுவும் ஒரு சந்தர்ப்பம் என்று கருதி வாழ்த்துக்களை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த தலைவர்களும் இருக்கின் றார்கள்.**

**நம் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் பலரின் வாழ்த்துகள் உள்ளூரில் ஊடகங்களில் வெளிவருவதுடன் அடங்கி விடும். அந்த வாழ்த்தை மினக்கெட்டு ஸ்டாலினுக்குக் கிட்டக் கூடியதாக அனுப்பி வைக்கும் தலைவர்கள் எத்தனை பேர் என்பது கேள் விக்குறிதான். இவர்களில் பலரை ஸ்டாலினுக்குத் தெரியவே தெரியாது. இவர்களையும், இவர்கள் கட்சியையும், ஸ்டாலின் முன்பின் கேள்விப்பட்டு அறிந்தே இருக்க மாட்டார். அப்படியா னோர் ஏன் மினக்கெட்டு அந்த வாழ்த்துச் செய்தியை ஸ்டாலி னுக்கு சென்னையில் கிட்டக் கூடியதாக அனுப்பப் போகின்றார் கள்?**

**'எங்காத்துக்காரரும் ஆபீசுக்குப் போகின்றார்..!' என்று கூறு வது போல, மற்றைய அரசியல் கட்சித் தலைவர்கள் போலத் தாங்களும் ஸ்டாலினுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர் என்ற செய்தி அவர்கள் படத்துடன் உள்ளூர் ஊடகங்களில் வெளிவந் தால் அவர்களுக்குப் போதும். அது முடிந்ததும் அவர்கள் விட யத்தைக் கிடப்பில் போட்டு விடுவார்கள்.**

**இதுதான் நம் அரசியல் தலைவர்களின் சிந்தனை போக்காக உள்ளது.**

**சரி, உண்மையில் தமிழக முதல்வராக ஸ்டாலின் பதவியேற் பதால் இலங்கையில் தமிழர்களின் நிலைமையில் நம்பிக்கை தரும் முன்னேற்றம் ஏதும் ஏற்படுமா என்று கேட்டால், அக்கேள் வியே மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் விவகாரமாகவே இருக்கும்.**

**இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியத் தரப்பில் ஏதேனும் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றால், அதைச் செய்ய வேண்டியது இந்திய மத்திய அரசுதான். பிரதமர் மோடி நிர்வாகம்தான்.**

**அந்த நிர்வாகமே முடியாமல், தமிழர் விவகாரத்தைக் கையாள முடியாமல், செயலிழந்து போய் நொண்டி வாத்து போல பரி தவித்துக் கொண்டிருக்கின்றது.**

**அந்த அரசுடன் முரண்பட்டு நிற்கும் தரப்பு – எதிர்தரப்பு – தமி ழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றது.**

**தமிழகத்தில் அதிகாரத்துக்கு வந்துள்ள தி.மு.கவினாலோ, அதன் தலைமைத்துவத்தினாலோ இன்றைய நிலையில் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் ஏதேனும் பயன்தரக் கூடிய பங்குபணி ஆற்ற முடியும் என்று கருதுவது அபத்தமானது. வேண்டுமானால் இலங்கைத் தமிழர்களுக்காகப் பரிந்து பேசி அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கலாம். அவ்வளவுதான்.**

**அத்தகைய ஆட்சி மாற்றத்துக்கு இலங்கைத் தமிழர் தரப்பு கள் விழுந்தடித்து, போட்டி போட்டு வாழ்த்துத் தெரிவிப்பது கொஞ்சம் 'ஓவர்' – அதிகப் பிரசங்கித்தனம் – போன்றே தோன்று கின்றது.**

## பிரதமர் தலைமையிலான கலந்துரையாடலை அரச உறுப்பினர்கள் பலர் புறக்கணித்தனர்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமை யில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை அலரி மாளிகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அரசாங்க கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளி யிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன்படி, அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, விமல் வீர வன்ஸ மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டிரான் அலெஸ், அத்துரலியே ரத்தன தேரர் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பிற கட்சிகள் அழைக்கப்பட்ட டிருந்தமையால் கூட்டத்தில் கலந்துகொள்ளா மல் இருப்பதற்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ முடிவு செய்திருந்தார் என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் முறை தொடர் பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரத மர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட் டம் கூட்டப்பட்டது.

இதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அழைக்கப்பட்டமையால், அவர்கள் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறிப்பிட்ட கட்சித் தலைவர்கள் செவ்வாய் மாலை 5 மணியள வில் அலரி மாளிகைக்கு சென்று கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று பிர தமருக்கு அறிவித்தனர் என அந்த செய்தி யில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 11ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார் என அந்த செய்தி யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க 64.39 வீதமானோர் தகுதி பெற்றுள்ளனர்

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 297 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றுள்ளனர் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை மூன்று லட்சத்து 62 ஆயிரத்து 824 பேர் பரீட்சை எழுதிய நிலையில், அவர் களில் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப் பிக்கத் தகுதி பெற்றவர்கள் 64.39 வீதமா கும்.

அத்துடன், பரீட்சைக்குத் தோற்றியவர் களில் 86 பேருடைய பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பரீட்சைப் பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்வதற்காக விண்ணப் பிப்பது தொடர்பான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.

## கொவிட்டுக்கு சேகரித்த நிதி வேறு தேவைக்கு பயன்படாது

### நாமல் திட்டவட்டம்



கொவிட்டுக்காக சேகரிக்கப்பட்ட நிதியை வேறு எந்தத் தேவைக்காகவும் பயன்படுத்தப் போவதில்லை என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வின் கருத்து ஒன்றுக்கு நாடாளுமன்றத்தில் இன்று (புதன்கிழமை) பதில் வழங்கும் போதே இந்தத் தகவலை அமைச்சர் வெளியிட்டுள் ளார்.

நாடளாவிய ரீதியில் அமைக்கப்படவுள்ள கொள்கலன் உடற்பயிற்சி மையங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 60 கோடி ரூபா நிதியை கொவிட் தடுப்புக்கு பயன்படுத்த வேண்டும் என சஜித் பிரேமதாஸ கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

எனினும் இதனை ஏற்றுக் கொள்ளாத நாமல் ராஜபக்ஷ, கோவிட் தடுப்பு நிதியும் வேறு எந்தத் தேவைக்கும் பயன்படுத்தப்பட மாட்டாது எனத் தெரிவித்துள்ளார்.


கொள்கலன்களைப் பயன்படுத்தி 500 வெளிப்புற உடற்பயிற்சிக் கூடங்களை நிறுவு வதற்கான திட்டத்துக்கு அமைச்சரவை நேற்று செவ்வாய்க்கிழமை ஒப்புதல் வழங்கியிருந் தது.

வெளிப்புற உடற்பயிற்சிக் கூடங்களை நாடளாவிய ரீதியில் அமைப்பதற்காக 62.5 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான திட்டத்தை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச் சர் நாமல் ராஜபக்ஷ அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது.

## ரிஷாத் எம்.பியை நாடாளுமன்றத்துக்கு கூட்டி வருவதில் கதை விடுகிறது அரசு!

### லக்ஷ்மன் கிரியெல்ல காட்டம்



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதி யுதீனை நாடாளுமன்ற அமர்வுகளுக்கு அனுமதிப்பது தொடர்பில் அரசாங்கம் கட் டுக்கதைகளை அவிழ்த்துவிடுகின்றது எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ரிஷாத்தை நாடாளுமன்றிற்கு அழைத்து வருகின்றமை தொடர்பில் 24 மணித்தி யாலங்களில் மூன்று கதைகள் சொல்லப் பட்டன எனத் தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் கையொப்பம் கிடைக்க வில்லை என அவரது குடும்ப உறுப்பினர்க ளிடம் நேற்று கூறப்பட்டது.கொவிட் நோய்த் தொற்று காரணம் எனப் பின்னர் கூறினர்.

தற்பொழுது பொதுப் பாதுகாப்பு அமைச் சர் பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றி கூறு கின்றார் என லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை களை பாதுகாக்கும் நபர் என்ற வகையில் சபாநாயகர் அனைவரினதும் உரிமைகளை உறுதி செய்ய வேண்டுமென அவர் கோரி யுள்ளார்.

# செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் 11 பேர் சாவு ஒக்சிஜன் தட்டுப்பாடுதான் காரணமா என விசாரணை

செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் கொரோனா நோயாளிகள் 11 பேர் நள்ளிரவில் அடுத்தடுத்து உயிரிழந்தனர். ஒக்சிஜன் பற்றாக்குறையால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு இவர்கள் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செங்கல்பட்டு மாவட்டத்தில் தினசரி ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சுமார் 500 இற்கும் மேற்பட்டோர் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று இரவு பத்து மணி முதல் இங்கிருந்த நோயாளிகளுக்கு ஒக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது. இதனால் ஒக்சிஜன் கிடைக்காமல் இங்குள்ள கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த 11 நோயாளிகள், நள்ளிரவில் அடுத்தடுத்துப் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. ஒக்சிஜன் பற்றாக்குறை யால் மூச்சுத்திணறல் ஏற்பட்டே அவர்கள் உயிரிழந்தனர் எனக் உறவினர்களும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சம்பவம் குறித்து தகவலறிந்த செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியாளர் ஜான்லூயிஸ், மருத்துவமனைக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். அதன்பின்னர் அவர், 'மருத்துவமனையில் போதுமான அளவு ஒக்சிஜன் கையிருப்பில் இருந்தது. இருப்பினும் எதிர்பாராத விதமாக உயிரிழப்பு ஏற்பட்டு விட்டது. 11 பேரது உயிரிழப்புக் குறித்து உரிய விசாரணை நடத்தப்படும்' என்று ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.



# புதுச்சேரி முதலமைச்சர் பதவியை நாம் கேட்கவில்லை பா.ஜ.க. பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா பேட்டி

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் முடிவில் என்.ஆர். காங்கிரஸ் – பா.ஜ.க. கூட்டணி 16 இடங்களில் வெற்றி பெற்றது. இந்தக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த அ.தி.மு.க. 5 இடங்களில் போட்டியிட்ட போதிலும் ஒரு இடம் கூட கிடைக்காமல் தோல்வியை தழுவியது.

பா.ஜ.க. அலுவலகத்தில் புதிய எம்.எல்.ஏக்கள் ஆலோசனை கூட்டம் நடந்த போது, மத்திய அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், மாநிலப் பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, மாநில தலைவர் சாமிநாதன் மற்றும் எம்.எல்.ஏக்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் பா.ஜ.க மாநிலப் பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா நிருபர்களைச் சந்தித்தார்.

"நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க., என்.ஆர். காங்கிரஸ் கூட்டணி பெரும்பான்மை இடங்களை பெற்றுள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் புதுவை சட்டசபையில் பா.ஜ.கவுக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை.

2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற கொள்கையுடன், காங்கிரஸ் இல்லாத புதுச்சேரியை உருவாக்க வேண்டும் என்று தீவிரமாக பணியாற்றினோம். அதன் பயனாக அமைச்சரவையில் இடம்பெறும் அளவுக்கு பா.ஜ.க. வளர்ச்சி அடைந்துள்ளது. தேர்தல் முடிவின் மூலம் காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

பிரசாரத்துக்காக பிரதமர் மோடி, மத்திய மந்திரி அமித்ஷா ஆகியோர் இரண்டு முறை புதுவைக்கு வந்தனர். அப்போது புதுவையை ஒரு முன்மாதிரி மாநிலமாக மாற்றுவோம் என்றும் மத்திய அரசின் திட்டங்கள் கொண்டு வரப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்தனர். புதுவையில் பா.ஜ.க., என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைய



உள்ளது. ஐந்து ஆண்டுகளில் சிறப்பாக மக்கள் நலத் திட்டங்கள் கொண்டு வரப்படும். புதுச்சேரி முதன்மை மாநிலமாக மாற்றப்படும்.

பா.ஜ.க. தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் இந்த ஆட்சியில் நிறைவேற்றப்படும். பா.ஜ.க., என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணிக்கு வாக்களித்த அனைவருக்கும், தேர்தலுக்காக உழைத்த கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் அங்கு தெரிவித்தார்.

பா.ஜ.க., என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணியில் முதல் – அமைச்சர் வேட்பாளர் யார்? என்று அவரிடம் கேட்கப்பட்ட போது, "எமது தேசிய ஜனநாயகக் கூட்டணி, ரங்கசாமி தலைமையில் தான் தேர்தலைச் சந்தித்து மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. எனவே நான் அவரை மரியாதை நிமித்தமாகவே சந்தித்துப் பேசினேன். முதலமைச்சர் பதவியை பா.ஜ.க. எதிர்பார்க்கவில்லை" என்று அவர் பதிலளித்துள்ளார்.

# கங்கனா ரணாவத்தின் டுவிட்டர் கணக்கு நிரந்தரமாக முடக்கம்!



பிரபல பொலிவுட் நடிகை கங்கனா ரணாவத்தின் டுவிட்டர் கணக்கு முடக்கப்பட்டுள்ளது. கங்கனாவின் டுவிட்டர் கணக்கை நிரந்தரமாக முடக்கியுள்ளதாக டுவிட்டர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்காளத்தில் தேர்தலுக்குப் பின்பாக நடந்த வன்முறைகள் தொடர்பாக கங்கனா ரணாவத்தின் பதிவுகள் சர்ச்சைக்குரிய வகையில் இருந்ததால், கணக்கு முடக்கப்பட்டதாகத் தெரிகிறது.

வெறுக்கத்தக்க பதிவுகளை மீண்டும் மீண்டும் கங்கனா ராணாவத் வெளியிட்டார் எனவும் டுவிட்டரின் விதிமுறைகளை மீறும் வகையில் அவரது பதிவுகள் இருந்தமையாலும் கணக்கு முடக்கப்பட்டதாகவும் டுவிட்டர் விளக்கம் அளித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கங்கனா வெளியிட்ட பதிவில், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியை, 'கட்டவிழ்த்து விடப்பட்ட பிசாசு' என்றும் அவரை அடக்குவதற்கு ஒரு ரௌடி போல மோடி களமிறங்கவேண்டும் என்றும் அர்த்தப்பட கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

பிரதமர் மோடியின் தீவிர ஆதரவாளரான கங்கனாவின் பல சர்ச்சைக்குரிய கருத்துகளால் அவருக்கு ஆபத்து என தெரிவிக்கப்பட்டதை யடுத்து அவருக்கு அரச பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பி.ஜே.பி. வெல்லமுடியாத சக்தி அல்ல என்பதை தேர்தல் முடிவுகள் தெளிவாக்கியுள்ளன என சிவசேனா தெரிவிப்பு!

பிரதமர் மோடியும், அமித்ஷாவும் வெல்ல முடியாதவர்கள் அல்ல என்பதை மேற்கு வங்காள தேர்தல் உணர்த்துகிறது என சிவசேனா கூறியுள்ளது.

மேற்கு வங்காளம், தமிழ்நாடு, அசாம், கேரளா, புதுச்சேரி ஆகிய ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், பி.ஜே.பி. வெல்லமுடியாத சக்தி அல்ல என்பது தெளிவாகியிருக்கிறது என்று மேற்குதி வங்காளத் தேர்தல் குறித்து சிவசேனா கட்சியின் அதிகாரப்பூர்வ பத்திரிகையான சாம்னாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோயைக் கையாளும் பணியைக்கூட ஓரம் கட்டி வைத்துவிட்டு பிரதமர் மோடி உட்பட முழு மத்திய ஆட்சியாளர்களும் மேற்கு வங்க தேர்தலில் மம்தா பானர்ஜியை தோற்கடிக்க மும்முரமாக வேலை செய்தனர். பல அழுத்தங்களை பல தரப்பிலிருந்தும் கொடுத்தனர். இருப்பினும், பா.ஜனதா கொடுத்த அனைத்து சவால்களையும் எதிர்கொண்ட மம்தா பானர்ஜி தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி கண்டுள்ளார்.

அனைத்து அரசு இயந்திரங்களும், பண பலமும், தொழில்நுட்பங்களும் தங்களது வசம் இருந்தாலும், பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் வெல்ல முடியாதவர்கள் அல்ல என்பதை இந்த தேர்தல் முடிவு நிரூபித்துள்ளது.

மேற்கு வங்கத்தை வெல்லும் ஒரே நோக்கத்துடன் பிரதமர் மோடியும், அமித்–ஷாவும் களத்தில் நுழைந்து கொரோனா தடுப்பு விதிகளை புறந்தள்ளிவிட்டு பிரமாண்டமான பொதுக்கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தினர். மாநிலங்களில், குறிப்பாக மேற்கு வங்காளத்தில் நீண்டகாலமாக பிரசாரம் செய்தமை கொரோனா பரவக் காரணமாக இருந்ததாக சென்னை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. மேற்கு வங்கத் தேர்தல் முடிவை பற்றி ஒரே வரியில் சொல்லவேண்டும் என்றால், பா.ஜனதா தோற்றுள்ளது, கொரோனா வென்றுள்ளது.

இந்தத் தேர்தலில் பா.ஜனதாவின் தோல்விக்கு யார் பொறுப்பேற்கப்போகிறார்கள்? அசாமையும் புதுச்சேரியையும் தவிர வேறு எங்கும் பா.ஜனதாவால் எதையும் செய்ய இயலவில்லை. மேற்கு வங்காள மக்கள் ஒரு செயற்கை அலைக்கு இரையாகாமல் இருந்ததற்கும், தங்களின் சொந்த கௌரவத்திற்காக ஒற்றுமையாக நின்றமையையும் பாராட்ட வேண்டும். இந்த நாடு மேற்கு வங்காளத்திடம் இருந்து பாடங்களைக்கற்றுக்கொள்ள வேண்டும் என்று சிவசேனா கட்சியின் சாம்னா பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா பரிசோதனை நடைமுறைகளில் மாற்றம் இந்திய மத்திய அரசின் புதிய அறிவிப்பு வெளியானது

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்படும்போது மீண்டும் கொரோனா பரிசோதனை நடத்தத் தேவையில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் உச்சம் பெற்றுள்ள நிலையில், கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான புதிய விதிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இதன்படி, மாநிலம் விட்டு மாநிலம் செல்லும் பயணிகள் நல்ல உடல் நிலையுடன் இருந்தால் கொரோனா பரிசோதனை தேவையில்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேபோல், கொரோனாத் தொற்றில் இருந்து குணம் அடைந்து விடு விக்கப்படும்போதும் மீண்டும் கொரோனா பரிசோதனை நடத்த தேவையில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று உச் சத்தில் உள்ளதால் நாடு முழுவதும் உள்ள 2,500 இற்கும் மேற்பட்ட ஆய்வு கூடங்களில் பணிச் சுமை அதிகமாக இருப்பதாகவும் எனவே, இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கொரோனா அறிகுறிகள் உள்ளவர்கள் அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும் எனவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. அறிகுறிகள் இல்லாதவர்களும் தங்கள் பயணங்களின்போது கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# முகக் கவசம் அணியாதோரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரபரப்பேற்பட்டது.

இப்படி பலவந்தமாக மடக்கிப் பிடிக்கப் பட்ட ஆண்களைத் தரதரவென்று தூக்கி தயாராக இருந்த பஸ்ஸில் ஏற்றிய பொலிஸார், அவர்களை பின்னர் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

சுமார் இரண்டு டசினுக்கும் குறையாத எண்ணிக்கையுடையோர் இன்று பிற்பகல் முதல் கட்டமாக அள்ளப்பட்டனர்.

# கனேரி தீவுகள் பகுதியில் கடலில் தத்தளித்த 3 குழந்தைகள், 42 அகதிகள் பத்திரமாக மீட்பு

கனேரி தீவுகள் பகுதியில் கடலில் தத்தளித்த 48 அகதிகளை ஸ்பெயின் கடற்படையினர் பத்திரமாக மீட்டனர்.

கிரேன் கனேரியாவில் இருந்து 30 மைல் தூரத்தில் கடலில் தத்தளித்த 3 குழந்தைகள், 18 பெண்கள் உள்பட 42 பேர் மீட்கப்பட்டு Arguineguin துறைமுக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை இதேபோல் கடலில் தத்தளித்த 16 அகதிகளை கடற்பகுதி அதிகாரிகள் மீட்டனர் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதில் ஒருவருக்கு ஹைபோதெர்மியா (hypothermia) இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவர் உடனடியாக மருத்துவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டார் என அதிகாரிகள் தெரி வித்து உள்ளனர்.



# ஜூலை முதல் வாரத்துக்குள் வயது வந்த 70 வீதத்தினருக்கு முதல் டோஸ் செலுத்த இலக்கு

## அமெரிக்க அதிபர் பைடன்



அமெரிக்காவில் கொரோனா பாதிப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இதனால் தடுப்பூசி போடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த மாதம் வெள்ளை மாளிகையில் பேசுகையில், ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு பின்னர் வயது வந்தவர்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசியை போட்டு கொள்ள தகுதியானவர்கள் ஆகின்றனர். அதற்கு முன் நாட்டிலுள்ள மூத்த குடிமக்கள் கொரோனாத் தடுப்பூசியை போட்டுகொள்ள வேண்டும் என தெரிவித்திருந்தார்.

மேலும், தனது 100 ஆவது நாள் பதவிக்காலம் முடிவில் 20 கோடி பேருக்கு தடுப்பூசிகள் செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜூலை 4 ஆம் திகதிக்குள் வயது வந்த அமெரிக்கர்களில் 70 சதவீதத்தினருக்கு முதல் டோஸ் தடுப்பூசி செலுத்துவதையும், 16 கோடி அமெரிக்கர்களுக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்துவதையும் நாங்கள் குறிக்கோளாக கொண்டுள்ளோம். இதன் மூலம் இயல்பு நிலை படிப்படியாக திரும்பும் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

# பாகிஸ்தானில் பஸ் விபத்து


## 15 பேர் சாவு



பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மாகாணம் லாகூரில் இருந்து கைபர் பகதுன்வா மாகாணத்தில் உள்ள மர்தான் என்ற இடத்திற்குச் சென்ற பஸ் திடீரென விபத்திற்குள்ளாகி பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது. இதில் 15 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். 35 பேர் காயம் அடைந்தனர். காருடன் மோதாமல் இருக்க சாரதி முயற்சி செய்த போது, பஸ் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதாக முதற் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மெக்சிக்கோவில் ரயில் விபத்து!

## 23 பேர் உயிரிழப்பு





மெக்சிக்கோ நாட்டின் தலைநகர் மெக்சிகோ சிட்டியின் மெட்ரோ ரயில் ஒவ்வொரு ஆண்டும் 10 லட்சத்து 60 ஆயிரம் பயணிகளை ஏற்றிச் செல்கிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு மெக்சிக்கோ சிட்டியின் தெற்குப் பகுதியில் உள்ள ஒலிவோஸ் மெட்ரோ ரயில் நிலையத்துக்கு மெட்ரோ ரயில் ஒன்று சென்று கொண்டிருந்தது. ரெயிலில் 100 இற்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர்.

ரயில் நிலையத்துக்கு அருகே உள்ள மெட்ரோ ரயில் பாலத்தில் ரயில் வேகமாக சென்று கொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராத வகையில் மெட்ரோ ரயில் பாலம் உடைந்து விழுந்தது. இதனால் அந்த பாலத்தில் சென்று கொண்டிருந்த மெட்ரோ ரயிலின் சில பெட்டிகள் சாலையில் விழுந்தன. அவற்றில் ஒரு பெட்டி சாலையில் சென்று கொண்டிருந்த ஒரு காரின் மீது விழுந்தது. சாலையில் விழுந்த ரயில் பெட்டிகளில் இருந்த பயணிகள் இடிபாடுகளில் சிக்கி அலறித் துடித்தனர். இதையடுத்து அப்பகுதி மக்கள் உடனே விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

விபத்து பற்றி தகவலறிந்த பொலிஸார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் பாலத்தில் தொங்கிக் கொண்டிருந்த ரயில் பெட்டிகளை ராட்சத கிரேன் மூலம் அப்புறப்படுத்தி மீட்புப் பணிகளை முடுக்கி விட்டனர்.

இடிபாடுகளில் இருந்து 23 பேரின் உடல்களை மீட்புக் குழுவினர் மீட்டனர். மேலும் 70 இற்கும் அதிகமானோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றன என அங்கிருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே விபத்தில் சிக்கிய மெட்ரோ ரயில் பெட்டிகளின் இடிபாடுகளுக்குள் மேலும் பல பயணிகள் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதனால் பலி எண்ணிக்கை இன்னும் உயரலாம் என தெரிகிறது.

# ஜி 7 வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு லண்டனில் ஆரம்பமானது




இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய 7 பணக்கார நாடுகள், ஜி 7 நாடுகள் என்ற அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வருகின்றன. தற்போது இதன் தலைவராக இங்கிலாந்து செயல்பட்டு வருகிறது.

ஜி 7 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டுக்கு இங்கிலாந்து ஏற்பாடு செய்துள்ளது. லண்டனில், லங்காஸ்டர் ஹவுஸ் அரங்கத்தில் இந்த 2 நாள் மாநாடு நேற்று தொடங்கியது.

மேற்கண்ட 7 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இதுதவிர, மாநாட்டின் சில நிகழ்வுகளில் பங்கேற்க இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு இங்கிலாந்து அழைப்பு விடுத்துள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக, அனைவரும் கொரோனா பரிசோதனைக்கு பின்னரே அரங்கத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஒவ்வொருவருக்கிடையே பிளாஸ்டிக் தடுப்புகள் வைக்கப்பட்டு இருந்தன.

மாநாட்டில், மியன்மார் இராணுவ புரட்சி, எதியோப்பியா பிரச்சினை, ஆப்கானிஸ்தானில் பன்னாட்டு படைகள் வெளியேறுவதால் உண்டாகும் சூழ்நிலை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

மேலும், உலகம் முழுவதும் கொரோனாத் தடுப்பூசி கிடைக்க ஜி – 7 நாடுகளிடையே கருத்தொற்றுமை உருவாக்குவது பற்றியும் விவாதிக்கப்படுகிறது. உக்ரைன் எல்லையில் ரஷ்யா தனது படைகளை குவிப்பது, ரஷ்ய எதிர்க் கட்சி தலைவர் அலெக்சி நவால்னியை சிறையில் அடைத்தமை ஆகிய பிரச்சினைகள் குறித்தும் பேசப்படுகின்றன.

# நாட்டை முடக்கியேனும் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த வேண்டும்

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு




**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

திருகோணமலை, மே 05

கொரோனாப் பரவலின் மூன்றாம் அலை மிக மோசமாக இந்நாட்டை பாதிக்கக் கூடும் என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம். எம். மஹ்தி தனது அச்சத்தை இன்று வெளியிட்டுள்ளார்.

எல்லாவற்றிற்கும் வெளிநாடுகளையே நம்பி இருக்கும் மூன்றாம் நிலை நாடான இலங்கையால் இந்தியாவைப் போன்றதொரு மோசமான நிலையில் கொரோனா பரவல் ஏற்படுமாக இருந்தால் மிகக் கடினமான ஒரு நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் என அச்சமடைகிறேன்.

நோய்ப் பரவல் அதிகரிக்கின்ற போது வைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை, ஒக்சிஜன் தட்டுப்பாடு, மரணங்கள் அதிகரித்தல், மரண ஓலங்கள் அதிகரித்தல், இறுதிக் கிரியைகளை செய்வதில் சிக்கல் போன்ற பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்ட பின்னர் நாட்டை முடக்குவதை விட இப்போதே முற்காப்பு நடவடிக்கைகளை தொடர்வதோடு முழு நாட்டையும் முடக்கியேனும் கொரோனாப் பரவலை முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து மக்களின் உயிர்களை பாதுகாக்க அரசாங்கம் முன் வரவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

## நீர்தாங்கி அன்பளிப்பு

மாவடி பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களினதும், பொதுமக்களினதும் குடிதண்ணீர் தேவையை போக்க பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், பள்ளிவாசல்களுக்கு இலவச குடிதண்ணீர் தாங்கியும் இலவச நீர்வழங்கலும் கடந்த பல மாதங்களாக நிர்மாணித்து மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபா செலவில் மாவடிப்பள்ளி ஜும்மா பள்ளிவாசலில் நிர்மாணிக்கப்பட்ட இவ் வேலைத்திட்டத்தை நேற்று செவ்வாய்க் கிழமை பைத்துல் ஹெல்ப் அமைப்பின் தலைவர் எம்.எச். ரைஸுல் ஹக்கீம் பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் கையளித்தார். இந் நிகழ்வில் பள்ளிவாசல் முக்கிய நிர்வாகிகள், மஹல்லா வாசிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# பொதுமக்களுக்கு கொரோனா விழிப்புணர்வூட்ட ஊடகவியலாளர்கள் பணியாற்ற வேண்டும்

## பிரதேச செயலாளர் வேண்டுகோள்



**(பைல் இஸ்மாயில், எஸ்.எம்.அறூஸ்)**

கொரோனாத் தொற்று தொடர்பில் பொது மக்களிடம் விழிப்புணர்வை ஊடகவியலாளர்கள் கொண்டு செல்வதன் அவசியம் மற்றும் பிரதேசத்தின் நிலை பேறான அபிவிருத்தி தொடர்பிலும், அட்டாளைச்சேனை பிரதேச ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின்போது பிரதேசத்தின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஊடகவியலாளர்களின் கருத்துக்களும், ஆலோசனைகளும், முன் வைக்கப்பட்டதுடன், கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் செயல் திட்டங்களை பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான விழிப்புணர்வுத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அத்தோடு அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உதவி செய்யக் கூடிய உணவு வங்கி செயல்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இந்தத் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஊடகவியலாளர்கள் பெரிதும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றும் பிரதேச செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

இச்சந்திப்பில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய கிராமங்களிலுள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களில் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மாட்டுவண்டியில் மரக் கடத்தல்



திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல் துறை மற்றும் முத்து நகர் பகுதியில் பாரிய மரக் கடத்தலொன்று, நேற்று பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, இரண்டு படகுகள் மற்றும் 3 மாட்டுவண்டிகளிலும் 30இற்கும் மேற்பட்ட கருங்காலி மற்றும் தேக்கு மரங்கள் 10 அடி நீளமான மரக்குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த கடத்தலுக்குரிய சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித் தனர்.

## நிவாரணம் வழங்கல்

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தப்பட்டு உள்ள கிராமங்களில் வசதி குறைந்தவர்களுக்கு வழங்குவதற்காக 1,250 ரூபா பெறுமதியான 800 உலர் உணவுப் பொதிகள் இன்று வழங்கப்பட்டன.

திருகோணமலை நலன்புரிச்சங்கம் கனடா அமைப்பின் தலைவர் ச.குகதாசன் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.ஸ்.அருள்ராஜா விடம் சம்பிரதாயபூர்வமாக இன்று காலை 9 மணிக்கு இவற்றினை கையளித்து வைத்தார்.

இலிங்க நகர், அன்புவழிபுர, காந்திநகர், பூம்புகார் போன்ற பிரதேசங்களில் நாளாந்தம் கூலித் தொழில் புரிந்து வருமானத்தை பெறும் குடும்பங்கள் காணப்படுகின்றன. இவர்களுடைய அல்லலை ஓரளவாவது குறைப்பதற்கு வசதியாக இந்த உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



## கொரோனா மூன்றாம் அலையை கட்டுப்படுத்தக் கலந்துரையாடல்

கல்முனை, மே 05

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஏற்பாடு செய்த கொரோனா மூன்றாம் அலையை கட்டுப்படுத்தல் தொடர்பாக திணைக்கள தலைவர்களுக்கிடையிலான விசேட உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். குணசிங்கம் சுகுணன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரையாற்றும் போது,கொரோனா மூன்றாம் அலையின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. கல்முனை பிராந்தியத்திற்குள் இந்த தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்கு சகல திணைக்களத் தலைவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தற்போது ரமழான் பெருநாள் காலமாக இருப்பதால் பொது மக்கள் ஒன்று கூடுவது அதிகமாக உள்ளமையால் சுகாதார சட்ட விதிமுறைகளை கடைப்பிடிப்பது அவசியமாகும்.

குறிப்பாக முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியைப் பேணுவது, கைகளை சுத்தமாக கழுவுவது போன்ற அடிப்படை விடயங்களை கடைப்பிடிப்பது முக்கியமாகும்.

கல்முனை பிராந்தியத்தில் மூன்றாம் அலையின் தாக்கம் இல்லாவிட்டாலும் அம்பாறை, மொனராகலை, திருகோணமலை போன்ற பிரதேசங்களில் இதன் தாக்கம் வேகமாக உள்ளது. அரசியல் பிரதிநிதிகள் சுகாதார தரப்பினர்களின் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்யாமல் இந்த நோயின் தாக்கத்தை உணர்ந்தவர்களாக செயற்பட வேண்டும். பொதுமக்களுக்கு எவ்வளவு விழிப்புணர்வை வழங்க முடியுமோ அவ்வளவுக்கு அதனை வழங்க வேண்டும்.

இந்த தொற்றுநோய் பற்றி சுமார் ஒன்றரை வருடமாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி வருகிறோம். இன்னும் இன்னும் இதனைத் தொடர்ந்து வழங்க முடியாது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் முடியுமான அளவு பங்களிப்பு செய்ய வேண்டும் என்றார்.

# கிண்ணியாவில் புடவைக் கடைக்குள் பெண்கள் செல்வதற்கு முற்றாக தடை

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

கொரோனா நோயாளர்கள் சிலர் கிண்ணியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் கிண்ணியா நகர சபையின் றஹ்மானியாவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் அனுமதிப்பதற்குறிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி நேற்று கொரோனாக் குழுக் கூட்டத்தின்போது குறிப்பிட்டார்.

கிண்ணியாவில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் இன்றைய தினம் கூடிய கிண்ணியா கொரோனாக் குழுவினால் சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் பின்வரும் கட்டுப்பாடுகள் இன்றிலிருந்து அமுலுக்கு வருகின்றன.

1. வாராந்த சந்தைகள், புடைவைக்கடைகள் மற்றும் ஏனைய கடைகளுக்கு பெண்கள் செல்வது இன்றிலிருந்து முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் ஆண்கள் மாத்திரம் கடைகளுக்கு செல்ல முடியும்.

2. கடைகளில் பொதுச் சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமானவர்கள் இருந்தாலும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமல் இருந்தாலும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதோடு கடைகளும் மூடப்படும்.

3. வெளி இடங்களில் இருந்து யாசகம் கேட்டு வருபவர்கள் தடைசெய்யபட்டுள்ளனர்.

4. பள்ளிவாசல்களுக்கு முகக்கவசம் இன்றி வருபவர்கள் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதோடு அதிகமானவர்கள் முகக் கவசம் அணியவில்லை எனில் பள்ளிவாசல்கள் மூடப்படும்.

# ஐ.பி.எல். 2021 தொடரின் நிலை என்ன? பி.சி.சி.ஐ. அதிகாரி வெளியிட்ட தகவல்கள்!



ஐ.பி.எல். 14 ஆவது சீசன் ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடைபெற்று வந்த நிலையில் கொரோனா அச்சம் காரணமாக ஐ.பி.எல். தொடர் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய போட்டிகள் எப்போது நடைபெறும் என்ற தகவல் வெளியாகாமல் இருந்துவந்த நிலையில் தற்போது இதுகுறித்து பி.சி.சி.ஐ. நிர்வாகி ஒருவர் பேசியுள்ளார்.

பி.சி.சி.ஐ. நிர்வாகியிடம் ஐ.பி.எல்.2021 இன் நிலை பற்றிக் கேட்கப்பட்டபோது, எஞ்சிய போட்டிகளை நடத்தி முடிக்க வேண்டும் என்பதுதான் பி.சி.சி.ஐ.யின் விருப்பமாகும். ரி20 உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்பு ஐ.பி.எல் போட்டிகளை நடத்தி முடிக்க எதிர்பார்த்துள்ளோம். அந்த நேரத்தில் கொரோனா பரவல் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு செயல்படுவோம். இதனால் போட்டிகள் அனைத்தும் ஐக்கிய அரபு அமீரகத்திற்குக் கூட மாற்றப்படலாம் எனத் தெரிவித்திருக்கிறார்.

தற்போது இந்தியாவில் சிக்கியுள்ள வெளிநாட்டு வீரர்கள் நிலை குறித்துப் பேசிய அந்த நிர்வாகி, வெளிநாட்டு வீரர்களை அவரவர் சொந்த நாட்டுக்குப் பத்திரமாக அனுப்பி வைக்கும் பணி ஆரம்பித்து விட்டது. இதற்காக குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில் அவர்கள் நாடு திரும்புவார்கள் எனக் கூறியிருக்கிறார்.

ரி 20 உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெறவிருக்கும் நிலையில், இங்கு கொரோனா தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், போட்டிகள் அனைத்தும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு மாற்றப்பட அதிக வாய்ப்பிருக்கின்றன எனக் கூறப்படுகிறது. இந்தியாவில் எதிர்வரும் மாதங்களில் கொரோனாத் தாக்கத்தைப் பொறுத்து உரிய முடிவுகள் எடுக்கப்படும் என பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# நியூசிலாந்து வீரர் ரொஸ் டெய்லர் காயம்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான ரொஸ் டெய்லர் பயிற்சியின் போது காயமடைந்துள்ளார். அவரது இடதுபின்னங்காலின் தசை நாரில் கிழிவு ஏற்பட்டு இருப்பது தெரியவந்துள்ளது. இதனால் பயிற்சியை விட்டு பாதியிலேயே இவர் வெளியேறியுள்ளார்.

அடுத்த மாதத் தொடக்கத்தில் இங்கிலாந்தில் நடக்கவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவர் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது. இருப்பினும் சிகிச்சைகளையடுத்து அவர் தொடர்ந்து அணியுடன் இருந்து பயிற்சிகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஜூன் இரண்டாம் திகதி லண்டன் லோர்ட்சில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடர் நிறைவடைந்ததும் நியூசிலாந்து அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியாவுடன் மோத இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். போட்டியை இந்தியாவில் நடத்தியிருக்கக்கூடாது இந்திய அணியின் முன்னாள் வீரர் காவ்ரி கருத்து



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் இடதுகை வேகப்பந்து வீச்சாளர் கர்சன் காவ்ரி அளித்த ஒரு பேட்டியில், ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியை ஐக்கிய அரபு அமீரகம் (யு.ஏ.ஈ.) போன்ற ஒரு நாட்டில் நடத்தியிருக்க வேண்டுமே தவிர, இந்தியாவில் அல்ல என்று தெரிவித்திருக்கிறார்.

'இந்தியாவில் ஓராண்டுக்கு மேலாக கொரோனா பாதிப்பு உள்ளது. எனவே 14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடரை ஐக்கிய அரபு அமீரகத்திலோ அல்லது வேறு நாட்டிலோ நடத்தியிருக்க வேண்டுமே தவிர, இந்தியாவில் அல்ல. இந்தியாவில் தற்போதைய நிலைமை மோசமாக உள்ளது. இந்த ஆண்டு இந்தியாவில் ஐ.பி.எல். போட்டித் தொடரை நடத்தியிருக்கக்கூடாது. கடந்த ஆண்டைப் போலவே அமீரகத்தில் போட்டியை நடத்தும் முடிவை எடுத்திருக்க வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.



# டென்னிஷில் இருந்து ஓய்வு பெறுகிறார் பார்பாரா ஸ்ட்ரைகோவா



இரட்டையர் பிரிவில் முன்னாள் முதல் நிலை வீராங்கனையான செக் குடியரசின் பார்பாரா ஸ்ட்ரைகோவா டென்னிஷில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என அறிவித்துள்ளார்.

தற்போது கர்ப்பமாக உள்ள ஸ்ட்ரைகோவா கடந்த பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் எந்த டென்னிஸ் போட்டியிலும் பங்கேற்கவில்லை. அவருக்கு செப்டம்பர் மாதத்தில் குழந்தை பிறக்கவிருக்கிறது. சர்வதேச டென்னிஸுக்கு விடை கொடுத்தாலும் ரசிகர்கள் முன்னிலையில் இன்னொரு போட்டியில் விளையாட விரும்புகிறேன் எனவும், அது 2022 ஆம் ஆண்டு விம்பிள்டனில் நடக்கும் என்று நம்புகிறேன் எனவும் ஸ்ட்ரைகோவா கூறியுள்ளார். அது ஒரு நட்பு ரீதியான போட்டியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

35 வயதான பார்பாரா ஸ்ட்ரைகோவா இதுவரை இரண்டு ஒற்றையர் பட்டங்களையும் 31 இரட்டையர் பட்டங்களையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய குத்துச்சண்டை நிர்வாகி கொரோனாவால் காலமானார்



இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தின் செயல் இயக்குநராக நீண்ட காலம் பணியாற்றி வந்த ஆர்.கே. சச்செட்டி கொரோனாப் பாதிப்பினால் காலமாகியிருக்கிறார்.

சில தினங்களுக்கு முன்பு கொரோனாவால் பாதிக்கப்பட்ட இவர், மருத்துவமனையில் வென்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி சச்செட்டி நேற்று மரணம் அடைந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு வயது 56. அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள இந்திய குத்துச்சண்டை சம்மேளனம், அவரது மறைவால் விளையாட்டு உலகில் மிகப் பெரிய வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளது.

'கடந்த சில ஆண்டுகளில் இந்திய குத்துச்சண்டை மிக உயர்ந்த இடத்தை எட்டியிருக்கிறது என்றால் அதற்கு அவரது அளப்பரிய பங்களிப்பு முக்கிய காரணம். நாங்கள் மட்டுமன்றி குத்துச்சண்டை விளையாட்டே அவரை தவற விடுகிறது' என்று இந்திய குத்துச்சண்டை சங்கத் தலைவர் அஜய் சிங் புகழாரம் சூட்டியுள்ளார்.

இதே போல் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தனது இரங்கலை தெரிவித்துள்ளார். இந்திய ஒலிம்பிக் சங்கம், சர்வதேச குத்துச்சண்டை சங்கம் போன்றனவும் ஆர்.கே.சச்செட்டியின் மறைவுக்கு தங்கள் அனுதாபங்களை வெளியிட்டுள்ளன.



# முல்லையில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஆக்கிரமிப்பு; அரசுடன் பேசி தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்

## தமிழரசுத் தலைவர் மாவை தெரிவிப்பு



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் தெற்கு, கருநாட்டுக்கேணி, செம்மலை கிழக்கு, செம்மலை ஆகிய எட்டு தமிழ் கிராம அலுவலர் பிரிவுகளையும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த ஆக்கிரமிப்புத் தொடர்பில் அரசுடன் பேசி, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

குறித்த ஆக்கிரமிப்புச் செயற்பாடு தொடர்பாக கடந்த திங்கட்கிழமை அந்தப் பகுதி மக்களால் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு கையளிக்கப்பட்ட மகஜரை இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் திங்கட்கிழமை நேரில் சந்தித்துக் கையளித்திருந்தார்.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

தந்தை செல்வா தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து முக்கியமாக இந்த சிங்கள மக்களுடைய குடியேற்றங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதனால் எமது இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கின்றதான நடவடிக்கைகள் எல்லாம் இடம்பெறுகின்றன என நாங்கள் தந்தை செல்வாவின் காலத்திலிருந்தே எதிர்ப்புத் தெரிவித்து, தமிழ் மக்களின் பலபகுதிகளில் குடியேற்றி எமது நிலங்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக எமது கட்சி அயராது உழைத்தது.

எங்களுடைய பிரதேசங்களில் சிங்கள மக்களின் பெரும்பான்மைத்துவம் வந்தால் தமிழர்களுடைய பிரதேசம் இல்லாமல் ஆக்கப்பட்டுவிடும்.

நாங்கள் எங்களுடைய பிரதேசத்தை ஆளப்போகின்றோம் என்ற கருத்திற்கு இடமில்லாமல் போயிருந்திருக்கும். இவ்வளவு காலமும் தமிழரசுக்கட்சி அந்தப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது.

அதற்குப் பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணி, அதற்குப்பின்னர் தமிழரசுக்கட்சி, விடுதலைப் புலிகள் கூட இந்த தமிழ் பிரதேசங்களினுடைய நிலங்களைப் பாதுகாப்பதற்காக அவர்களும் ஆயுதம் ஏந்திப் போராடியிருக்கின்றனர்.

ஆனால் தற்போது இந்தப் போருக்குப் பின்னரும் சென்ற ஆட்சிக்காலத்தில் நாங்கள் ஆதரித்த சிறிசேனா ஜனாதிபதியின் தலைமையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் மகாவலி அதிகாரசபையினாலே ஆக்கிரமிக்கப்படுகின்ற நிலைமைகளுக்கு எதிராக, அதேவேளை இராணுவத்தினர் குவிக்கப்பட்டு அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கள் இருக்கும் நிலங்கள் தொடர்பாக கடந்த ஆட்சியாளர்களுடன் நாம் பேச்சுகளில் ஈடுபட்டிருக்கின்றோம். பல போராட்டங்களும் இடம்பெற்று வந்திருக்கின்றன.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நிலைமைகள் தொடர்பாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் என்னிடம் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

குறிப்பாக நான் அந்த முல்லைத்தீவின் மணலாற்றுப் பிரதேசத்தைப் பார்வையிட்டிருக்கின்றேன். அந்தப் பகுதிகளில் வாழ்ந்திருக்கின்றேன்.

அந்தப் பகுதிகள் தற்போது செம்மலையிலிருந்து, கொக்கிளாய் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி வரைக்கும் இருக்கின்ற பகுதிகளை மகாவலி அதிகார சபை ஆக்கிரமித்து, அப் பகுதிகளை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கு அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர் என நாம் அறிவோம்.

இந்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டுக்கு எங்களுடைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றார்கள். இதனால் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பில் என்னோடு பேசியிருக்கின்றார்கள்.

அந்தவகையில் இவ்வாறு முல்லைத்தீவில் இடம்பெறும் ஆக்கிரமிப்புத் தொடர்பாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான மரியநாயகம் தொம்மைப்பிள்ளை, சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் நேற்று என்னைச் சந்தித்துக் கலந்துரையாடியமையுடன், ஆக்கிரமிக்கப்படும் பகுதிகளிலுள்ள மக்களால் வழங்கப்பட்ட மகஜர் ஒன்றையும் என்னிடம் வழங்கியிருந்தனர்.

இந் நிலையில் கல்முனை பிரச்சினை தொடர்பாக சமல் ராஜபக்ஷவுடன் நேற்று எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசியிருந்தார்.

அந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவில் இடம்பெறும் இந்த மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆக்கிரமிப்புத் தொடர்பாகவும், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்புத் தொடர்பிலும் சமல் ராஜபக்ஷவுடன் பேசுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிடம் தொலைபேசியூடாக அழைப்பு ஏற்படுத்தி வலியுறுத்தியிருந்தேன்.

நாங்கள் ஒட்டுமொத்தமாக இதுதொடர்பாக பிரதமருடனும் பேசவேண்டும்.

நாங்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாக, இந்த அரசாங்கத்துடன் இந்த விடயம் தொடர்பில் பேசி இப் பிரச்சினையை ஒரு தீர்வுக்குக்கொண்டுவரவேண்டும்.

எங்களுடைய நிலங்கள் பாதுகாக்கப்படவேண்டும். எங்கள் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

எங்களுடைய பெரும்பான்மைத்துவம் தமிழ் பிரதேசங்களில் சீர்குலைக்கப்படக்கூடாது. குடிப் பரம்பலை மாற்றியமைக்கப்படக்கூடாது. அதற்குரிய செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுவோம். இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக பாரிய அளவில் மக்களைத் திரட்டி நாம் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கவேண்டும்.

ஆனால் தற்போது கொரோனாத் தொற்று தீவிரமடைந்திருக்கின்ற நிலையில் நாம் இந்த ஆக்கிரமிப்பு விடயம் தொடர்பாக அரசுடன் பேசி தீர்வைக் காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அந்த முயற்சி தொடரும் - என்றார்.

# திறந்த பல்கலை உப வேந்தர் பதவி; முன்மொழியப்பட்ட பெயர்கள் நிராகரிப்பு!

இலங்கை திறந்த பல்கலைக்கழத்தின் உப வேந்தர் பதவிக்கு முன்மொழியப்பட்ட மூவரின் பெயரும் எந்த வித காரணங்களுமின்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நிராகரிக்கப்பட்டுள்ளன என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தலைவர் அன்ட பிரியரத்ன, அதன் முக்கியஸ்தர்களாக ரெஹான் பெர்னாண்டோ மற்றும் மெஹின் மென்டிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் தற்போதைய உப வேந்தரான பேராசிரியர் எஸ்.ஏ.ஆரியதுரையின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

இதனால் குறித்த பதவிக்கு புதியவரை நியமிப்பதற்கான விண்ணப்பம் கடந்த வருடம் கோரப்பட்டது. இதற்கு விண்ணப்பித்த ஆறு பேரில் இருந்து மூவரை பல்கலைக்கழகப் பேரவை புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்திருந்தது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழிநுட்ப பீடாதிபதி பேராசிரியர் அசேல டொலகே (புள்ளிகள் - 70), பல்கலைக்கழகத்தின் கல்வி தொழிநுட்ப பேராசிரியரும், கல்வி பீட முன்னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் சிரோனிகா கருணாநாயக்க (புள்ளிகள் - 69) மற்றும் களனி பல்கலைக்கழக பேராசிரியர் லலித் திலகரட்ண (புள்ளிகள் - 67) ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டனர்.

உப வேந்தர் நியமனத்திற்காக இவர்கள் மூவரின் பெயர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்தன. தற்போதைய உப வேந்தரின் பதவிக்காலம் நிறைவடைய இன்னும் ஒன்றரை மாத காலமே உள்ள நிலையில் குறித்த மூவரின் பெயர்களும் எந்தவித காரணங்களுமின்றி ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதனால், புதிய உப வேந்தரைத் தெரிவுசெய்வதற்கு மீண்டும் விண்ணப்பம் கோர வேண்டியுள்ளது. புதிதாக விண்ணப்பம் கோரி மீண்டும் மூவரை ஜனாதிபதியின் சிபாரிசுக்கு நியமனம் செய்வதற்கு இன்னும் ஆறு மாத காலம் தேவைப்படும்.

இற்குள் தற்போதைய உப வேந்தர் ஓய்வு பெற்றுவிடுவார். இதனால் பல்கலைக்கழக நிர்வாகத்தில் பாரிய சிக்கல் ஏற்படும். இதன் காரணமாக மேற்படி சிபாரிசு செய்யப்பட்ட மூவரில் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அவ்வாறில்லாவிட்டால் இதற்கு எதிராக இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் போராடத் தயாராகவுள்ளது. பேரவையால் முன்மொழியப்பட்ட மூவரில் ஒருவரை நியமிப்பதே பாரம்பரியமாகும்.

20 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக இந்த பாராம்பரியத்தை மீற அவர் முயற்சிக்கின்றார். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மீண்டும் உப வேந்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரி ஜனாதிபதிக்கு விருப்பமில்லாத மூவர் சிபாரிசு செய்யப்பட்டால் மூன்றாவது தடவையாக விண்ணப்பம் கோருவதா? விரைவில் இந்த விடயம் தொடர்பில் எமது சங்கம் முக்கியமான தீர்மானமொன்றை எடுக்கவுள்ளோம்.

சுயாதீன அமைப்பான பல்கலைக்கழக முறையில் அரசியல்வாதிகள் கைவைத்து மாணவர்களின் கல்வியைப் பாழாக்க வேண்டாம் என ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.05.2021இல் வெளியிடப்பெற்றது.